1974 சனவரி 21]

மாவட்டங்களிலே கொள்முதல் பண்ணும்போது கழித்துவாங்குவதைவிட மேலாகக் குறைவு ஏற்படுகிறதா அல்லது அதிலேயே சரிக்கட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, 57 கிலோவுக்கு 14 பர்செண்ட் வரை நாங்கள் 'மாய்ஸ்சர்'க்காகக் கழித்து வாங்குகிறோம். அதுதான் இப்போது இருக்கின்ற கணக்கு. உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் வராத அளவுக்கு அரசு வாங்குகிறது. அந்த நெல் வாங்கிய பிறகு, காயாமல் இருக்க முடியாது. சர்க்காராக இருந்தாலும், அப்படிக் காய்ச்சல் ஏற்பட்டு வருகின்ற நஷ்டத்தை தனியாக வியாபாரத் துறையிலே கணக்கிட்டு, அதை அரசு ஏற்றுக்கொள்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, சேதாரம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். ஆனால் இதிலே ஏற்படுகின்ற சேதாரம், ரயில் போக்குவரத்திலே இல்லாமல் பெருச்சாளிகளால்தான் ஏற்படுகிறது என்று சொல்கின்றார்களே, அது உண்மைதானா? பெருச்சாளிகளால் ஏற்பட்ட சேதாரம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பெருச்சாளிகளினால் நாட்டிலே பல சேதாரங்கள் ஏற்படுகின்றன. ஆனால் நான் சொன்ன சேதாரம் பெருச்சாளிகளால் ஏற்பட்ட சேதாரம் அல்ல, அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

Pension to Arul Thiru Sivagnana Thambiran

@ * 1 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any petition regarding the pension due to Arul Thiru Sivagnana Thambiran of Srila Sri Gnanaprakasa Desika Swamigal Madam, Kanchipuram; and

(*b*) if so, the action taken by the Government thereon?

@ 19—1—1974 ஆம் நாள் வினுப் பட்டியிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

[1974 சனவரி 21

அருட்டிரு சிவஞானத் தம்பிரான் அவர்களுக்கு ஓய்வூதியம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடத்தைச் சேர்ந்த அருட்டிரு சிவஞானத் தம்பிரான் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம் கோரி, அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டு களாக கடிதப் போக்குவரத்தில் இருக்கின்றது. நான் அமைச்சர் அவர்களிடத்தில் வேண்டுமானால் கடிதப் போக்குவரத்துக்களைக் கொடுக்கிறேன். முதலிலே அது போக்குவரத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். கோப்புக்கள் இல்லை என்று எழுதினார்கள். பின்னர் சர்வீஸ் ரிஜிஸ்டர் இல்லை என்று எழுதினார்கள். அதனாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்பு கூர்ந்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வினா அரசுக்கு விண்ணப்பித்திருக்கின்றாரா என்பது தான். விடை 'இல்லை' என்பது. அவர்கள் விண்ணப்பித்திருப்பது யாரிடத்திலே ? கல்வி இயக்குநர் அவர்களிடத்தில். அது கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் சிலபல விளக்கங்களைக் கேட்டிருக்கின்றார்கள். அந்த இயக்குநருக்கு விளக்கங்கள் இன்னும் வரவில்லை. பள்ளியில் பணி புரிந்த காலம் பணி ஏற்றது ஆகிய வற்றுக்கான ஆவணங்களை மாவட்டக் கல்வி அலுவலர் மேல் ஒப்பத்துடன் அனுப்ப கல்லூரி முதல்வர் கேட்கப்பட்டுள்ளார். தேவையான ஆவணங்கள் எதுவும் இதுவரையில் வரவில்லை. மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வந்தவுடன், அன்னாரது ஓய்வு ஊதிய மனு பரிசீலிக்கப்படும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அவைகள் கொடுக்கப்படுமேயானால் ஆராய்ந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லா படிமானங்களையும் அங்கே அனுப்பிய பிறகு, ஒரு தடவை தங்களிடத்தில் இருப்பதாக எழுதியிருந்தார்கள். அதற்குப் பிறகு காணவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். இப்போது 40 ஆண்டுகள் வேலை பார்த்த பிறகு,

1974 சனவரி 21]

பள்ளியிலே சர்வீஸ் எண்டார்ஸ்மெண்ட் வாங்கிக்கொண்டு வருவது சாத்திய மல்ல. கடைசியாக அவர் வேலே பார்த்த கல்லூரியில் பதவி ஏற்க பதிவு செய்த நகல்களுக்குச் சான்றிதழ் வழங்கியிருக்கின்ருர்கள். அதையே ஆதார மாக வைத்துக்கொண்டு அரசு ஓய்வூதியம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றி இயக்குநர் அலுவலகத்திற்கு முழுவிவரங்களைத் தருவார்களேயானுல், அவைகளை அனுப்பி அதன்மேல் தக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த அருட்டிரு சிவஞானத் தம்பிரான் அவர்கள் எந்தக் கல்லூரியில் பணி புரிந்தார்கள்? அவருக்கு கல்வி இயக்குநர் கொடுத்த சர்வீஸ் சர்ட்டிபிகேட், சர்வீஸ் ரிஜிஸ்டர் இருக்கிறதா என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஞானபிரகாச சுவாமிகள் மடத்தில் தற்போது மடாதிபதியாக இருக்கின்ற ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிய சுவாமிகள் பரமாசாரியர் 1926 லிருந்து 1952 வரையிலும் தமிழாசிரியராக இருந்திருக்கின்ருர். பிறகு 1952 தொடக்க முதல் பாயிரத்தைச் சேர்ந்த தருமபுர ஆதீனக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்திருக்கிருர்கள். பின்னர் ஜூலை 1 ஆம் தேதி வரை பணி புரிந்திருக் கின்ருர்கள். அதை வைத்துக்கொண்டு அந்தக் கல்லூரியில் பணி புரிந்த காலத்தையும் சேர்த்து, அந்த அடிப்படையில் ஓய்வூதியம் வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கின்ருர்கள். ஏற்கெனவே இருக்கின்ற ஆணைப்படி, ஓய்வூதியம் பெறுவதற்கு அவர் தகுதியற்றவர் என்று எழுதப்பட்டது. பிறகு 18—7—1972ல் அரசு ஆணை வெளியிட்டது. குறிப்பிட்ட பள்ளியில் பணிபுரிந்த காலத்தையும் கல்லூரியில் பணி புரிந்த காலத்தையும் சேர்த்து, ஓய்வூதியம் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்ருர்கள். ஏற்கெனவே இருந்த சட்டதிட்டத்தின்படி பள்ளியில் பணி புரிந்த காலம் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. 18—7—1972 லிருந்து பள்ளிகளில் பணி புரிந்த காலத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்பேரில் தான் ஓய்வூதியம் தனக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதைப் பொறுத்துத்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில ஆவணங் கள் தேவைப்படுகின்றன என்று கல்லூரி இயக்குநர் அவர்கள் கேட்டிருக்கின் ருர்கள். அதுபற்றிய ஆவணங்கள் வர வேண்டுமென்று எதிர்பார்க்கிருர்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அவையெல்லாம் அனுப்பி வைக்கப் பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கின்ருர்கள். அந்த விவரங்கள் முழு வதும் கொடுக்கப்படுமேயானுல், மீண்டும் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற் கொள்ளலாம்.